[1970 மார்ச் 25

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 12ஆம் தேதி அவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். 19ஆம் தேதிக்குள் அரசாங்கம் தலையிட்டு நடுவர் தீர்ப்பிற்கு விடலாம், வேலையிழப்பு நாட்கள் இருக்கக் கூடாது, வேலைக்குச் செல்ல வேண்டும் என்று முயற்சிகள் எடுத்தோம். அதற்குப் பிறகும் தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் இருந்தார்கள். அரசாங்கம் தலையிட்டு அவர்களைக் கூப்பிட்டுக் கலந்துபேசி வேலைக்குப் போக வேண்டுமென்று சொன்னோம். அரசாங்கம் முயற்சி எடுத்ததால் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளதை தமிழகத்து அனைத்துக் கட்சிகளும் அவர்களுடைய கோரிக்கை நியாயம் என்று ஆதரவு கொடுக்கக் கூடிய காலகட்டத்திலே டைரக்டர் வெளிநாட்டிலிருந்து வருகின்ற வரையில் வேலை நிறுத்தம் என்று செய்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கை போனஸ் 19 சத வீதம் கொடுக்கவேண்டும் என்பது. அது எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அவர் வெளிநாட்டுக்குப் போயிருந்தார் என்று சொல்வது தவறு; உடல்நலம் சரியில்லாத தால் சிகிச்சைக்காகப் போயிருக்கிறார். அவர்கள் முதலமைச்சர் அவர்களையும் என்னையும் தனித்தனியாக சந்தித்துப் பேசி ஏற்றுக் கொண்டார்கள். தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஏறக்குறைய அந்தப் பிரச்னை முடிகிற சூழ்நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : May I know which is the political party that was instigating this trouble in the factory?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : கேள்வி கேட்கிற உறுப்பினர் அவர்களுக்கே அது புரியும் என்ற காரணத்தினாலே நான் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மறுதினம் எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, திரு டி. மார்டின், திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோர் தனித்தனியே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.